**DEPOSITION OF WITNESS**

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | |
|---|---|
| Calendar | **C.C.No.277/2010** |
| Miscellaneous | C.M.P.No |
| Sessions | **S T C No.** |
| | Prosecution |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name **ரஞ்சித்குமார்**

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

30.10.2018 அ.சா.2

**முதல் விசாரணை**

நான் மேட்டுக்கடையில் குடியிருந்து வருகிறேன். நான் அ.சா.1 க்கு சொந்தமான ஆர்.டி வெள்ளி மாளிகையில் கடை ஊழியராக வேலை செய்து வருகிறேன். அந்த கடை பெருந்துறை - குன்னத்தூர் ரோட்டில் உள்ளது. கடந்த 06.10.2009-ம் தேதி மதியம் 1.30 மணிக்கு அ.சா.1 எங்கள் கடையின் உரிமையாளர், நானும், சந்தியா, தீபா ஆகியோர் கடையில் இருந்தோம். அப்பொழுது 5 பெண்கள் எங்கள் கடைக்கு வந்தார்கள். 4 பெண்கள் நேருக்கு நேர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். ஒரு பெண் மட்டும் மேற்கு பக்கமாக உடகார்ந்து கொண்டிருந்தார்கள். குத்துவிள்கு போன்ற வெள்ளிப் பொருட்களை காண்பிக்குமாறு சொன்னார்கள். ½ மணி நேரம் வெள்ளிப் பொருட்களை பார்த்துக் கொண்டிருந்தார்கள். பிறகு டிசைன் பிடிக்கவில்லை என்று கிளம்பி போய்விட்டார்கள். நாங்கள் காண்பித்த வெள்ளிப் பொருட்களை அடுக்கி வைத்தபோது ஒரு வெள்ளி கொலுசு பெட்டி காணவில்லை. அதில் 107 ஜதை வைத்திருந்தோம். நாங்கள் அ.சா.1 இடம் 107 வெள்ளிக் கொலுசுகள் கொண்ட ஒரு பெட்டியை காணவில்லை என்று கூறினோம். உடனே அ.சா.1 கேமராவை போட்டுப் பார்த்தபொழுது மேற்கு புறமாக உட்கார்ந்திருந்த பெண் வெள்ளிக் கொலுசு இருந்த பெட்டியை அவர் கொண்டு வந்த ஒயர் கூடையில் வைத்து வெளியே போனது கேமராவில் பதிவானது. அந்த கேமராவில்உள்ள பதிவுகளை எடுத்துக் கொண்டு அ.சா.1 மறுநாள் பெருந்துறை காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார். அன்றே பெருந்துறை காவல் நிலைய போலீசார் எங்கள் கடைக்கு வந்து விசாரணை

செய்தார்கள். பதிவான அந்த போட்டோக்களை போலீசார் கைப்பற்றினார்கள். அதன் பிறகு 4 மாதங்கள் கழித்து 02.02.2010 ம் தேதி பெருந்துறை காவல் நிலையத்திலிருந்து கடையின் உரிமையாளர் அ.சா.1 க்கு போன் செய்து வரவழைத்தார்கள். தகவல் சொன்னதன் பேரில் அ.சா.1, நானும், தீபா, சந்தியா ஆகியோர்கள் பெருந்துறை காவல் நிலையம் சென்றோம். அவர்கள் கொடுமுடி காவல் நிலையத்தில் 5 பெண்களை பிடித்து வைத்திருப்பதாகவும் எங்களை கேட்டுக் கொண்டார்கள். நாங்கள் கொடுமுடி காவல் நிலையம் சென்றோம். நாங்கள் போய்ப் பார்த்தபொழுது கருப்பாயி என்ற பெண் வெள்ளி கொலுசு கொண்டு பெட்டியை ஒயர்கூடையில் எடுத்துச் சென்றதையும் அடையாளம் காட்டினோம். அவர்களிடம் இருந்து சுமார் 2 ½ கிலோ எடைகொண்ட 37 ஜதை கொண்ட கொலுசை போலீசார் கைப்பற்றினார்கள். அதை நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதாகவும் மனு செய்து பெற்றுக் கொள்ளுமாறும் சொன்னார்கள். எங்கள் கடையில் திருடிய 5 பெண்களையும் அடையாளம் காட்ட முடியும். (எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.) என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள கொலுசுகள்தான் கடையில் திருடு போன கொலுசுகளாகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எ.த.கு.வி.**

வழக்கறிஞர் ஆஜர். போதுமான கால அவகாசம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து/கைரேகை பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், பெருந்துறை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
PERUNDURAI

| | |
|---|---|
| Calendar | **C.C.No.277/2010** |
| Miscellaneous | C.M.P.No |
| Sessions | **S T C No.** |
| | Prosecution |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name **சத்தியமூர்த்தி**
Father's Name
Village
Taluk
Caste
Calling
Religion
Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

30.10.2018 அ.சா.1

**முதல் விசாரணை**

நான் பெருந்துறை எஸ்.எல்.என். நகரில் குடியிருந்து வருகிறேன். பெருந்துறை குன்னத்தூர் ரோட்டில் ஆர்.டி. வெள்ளிமளிகை கடை வைத்து தொழில் நடத்தி வருகிறேன். 06.10.2009-ம் தேதி மதியம் சுமார் 1.30 மணிக்கு ஐந்து பெண்கள் எனது கடைக்கு வந்து கொலுசு எடுக்க வேண்டும் என்று சொன்னதன் பேரில் ஊழியரிடம் நான் கொலுசை காட்டுங்கள் என்று சொன்னேன். அந்த கொலுசை 5 நபர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது குத்துவிளக்கை காண்பிக்குமாறு கேட்டார்கள். அதையும் எங்கள் கடையில் வேலை செய்யும் ஊழியர்கள் ரஞ்சித்குமார், தீபா, சந்தியா ஆகியோர்கள் வெள்ளி பொருட்களை காண்பித்தார்கள். நான் கடையில் வரவு செலவு கணக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்கள் டிசைன் சரியில்லை என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டார்கள். நான் கடை ஊழியரிடம் வெள்ளிப் பொருட்கள் அவர்களிடம் காண்பித்த பொருட்கள் சரியாக இருக்கிறதா என்று பார்க்கச் சொன்னேன். ஒரு பாக்சில் இருந்த 107 கொலுசுகள் காணவில்லை. பெட்டியோடு காணாமல் போனது தெரிய வந்தது. அந்த பெட்டியில் குஷ்பு கொலுசு, எஸ் செயின் மாடல், புதியம் கொலுசு, ஜாலரா கொலுசு போன்ற 4 வகையான கொலுசுகள் அந்த பெட்டியில் இருந்தது. நாங்கள் கடையில் இருந்த கேமராவைப் போட்டுப் பார்த்தோம். அப்பொழுதுதான் தெரிய வந்தது. அந்த பெண்கள் கொண்டு வந்த ஒயர் கூடையில் வெள்ளிக் கொலுசுடன் கூடிய பெட்டியை எடுத்துக்

கொண்டு வெளியில் போனது தெரிய வந்தது. அந்த கேமராவில் பதிவுகளை போட்டோ எடுத்தும், பிரிண்ட் போட்டுக் கொண்டும் நடவடிக்கை எடுக்க வேண்டி 07.10.2009 ம் தேதி காலை 8.00 மணிக்கு எனது கைப்பட புகார் ஒன்றை எழுதி கொடுத்தேன். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் புகார்தான் நான் கொடுத்த புகார். அதிலுள்ளது என்னுடைய கையெழுத்து. அந்த புகார் அ.சா.ஆ.1. அன்றைய தினமே பெருந்துறை காவல் நிலைய போலீசார் கடை ஊழியர்களை விசாரித்தார்கள். எங்கள் கடையில் வைத்திருந்த போட்டோக்களை கைப்பற்றினார்கள். பிறகு எங்களையும் விசாரித்தார்கள். பிறகு 4 மாதங்கள் கழித்து 02.02.2010-ம் தேதி பெருந்துறை காவல் நிலையத்திலிருந்து என்னை அழைத்ததன் பேரில் நானும் சென்று விசாரித்தேன். கொடுமுடி காவல் நிலையத்தில் 5 பெண்களை வெள்ளிக் கொலுசுகளுடன் கைது செய்து வைத்துள்ளதாகவும் அவர்களை வந்து அடையாளம் காண்பிக்குமாறும் சொன்னார்கள். நானும் எங்கள் ஊழியர்களும் கொடுமுடி காவல் நிலையம் சென்று அடையாளம் காண்பித்தோம். அங்கு 5 பெண்கள் இருந்தார்கள். அவர்களில் யார் என்னுடைய கடையில் கொலுசுகளை எடுத்த பெண்ணை அடையாளம் காட்டினேன். அவர் பெயர் கருப்பாயி என விசாரித்ததில் தெரிந்து கொண்டேன். அவர்களிடம் 37 ஜோடி கொலுசுகள் இருந்ததை (2 1/2 கிலோ) காண்பித்தார்கள். போலீசார் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதாகவும் பெற்றுக்கொள்ளுமாறும் சொன்னார்கள். அதை நான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். நான் நீதிமன்றத்தில் கொலுசுகளை திரும்ப பெற்றுச் சென்றபொழுது புகைப்படங்கள் மற்றும் சி.டி.ஐ ஒப்படைத்திருந்தேன். அந்த கொலுசுக்கான புகைப்படங்கள்தான் என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்கள் ஆகும். அந்த புகைப்படங்கள் மற்றும் சி.டி. அ.சா.ஆ.2. (எண்ணிக்கை 7 ) எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். (எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில்லை. கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எ.த.கு.வி.**

வழக்கறிஞர் ஆஜர். போதுமான கால அவகாசம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து/கைரேகை பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், பெருந்துறை